<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 313/2006</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **02.03.2026** |
| **பெயர்** | **தவமணி** |
| **த/பெ** | **பரமானந்தம்** |
| **சாட்சி** | **DW5** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.42.p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. எனக்கு வயது 56. நான் அனுப்பம்பட்டில் வசிக்கிறேன். நான் இ.பி–ல் வேலை செய்தேன் தற்போது வி.ஆர்.எஸ் கொடுத்துவிட்டேன். இராதாகிருஷ்ணநாயுடுவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு 4 பிள்ளைகள் அவர்கள் சுரேஷ்பாபு, ராஜேஷ்பாபு, மல்லிகா மற்றும விஜயா. இரத்தினவள்ளியம்மாள் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர்கள் என்னுடைய உறவினர்கள். சாந்தகுமாரி முதலில் இறந்தாரா அல்லது நாராயணன் முதலில் இறந்தார என்றால் சாந்தகுமாரி தான் முதலில் இறந்தார். வழக்கு சொத்தின் விஸ்தீர்ணம் என்ன என்றால் சுமார் 4 ஏக்கர் ஆகும்.

2. நாராயணன் மற்றும் சாந்தகுமாரி இருவரும் பல வருடங்களுக்கு முன்பு இரத்தினவள்ளி மற்றும் இராதாகிருஷ்ணநாயுடுவிற்கு விற்றுவிட்டார்கள் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். குறிப்பிட்டு எந்த வருடம் என்று கூற இயலுமா என்றால் இயலாது. பதிவு அலுவலகத்திற்கு சென்றார்களா என்றால் தெரியாது. எவ்வளஹ தொகைக்கு விற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் பல காலம் பயிரிட்டு வந்ததாக கூறியிருந்தேன், தற்போது வழக்கு சொத்தில் யார் பயிரிட்டு வருகிறார்கள் என்றால் சுரேஷ்பாபு மற்றும் இராஜேஷ்பாபு. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

அசோக் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி இராதாகிருஷ்ணன் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சொத்து பத்திரம் எதுவும் நேரடியாக பாரத்த்தில்லை என்றால் பார்த்ததில்லை. பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. பத்திரத்தை பார்க்காமல் சொத்து குறித்து என்னால் எதுவும் சொல்ல முடியாது என்றால் சரிதான். இராதாகிருஷ்ணன் என்ன பதில் தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இராதாகிருஷ்ணநாயுடு சார்பில் எத்தனை சாட்சிகள் விசாரனை செய்தார்கள் என்றால் 2 சாட்சிகள். மல்லிகாவை தெரியுமா என்றால் சிறிய வயதிலேயே தெரியும். அவரின் வீட்டில் விளையாடியும் இருக்கிறோம். வழக்கு சொத்தில் போர் உள்ளதா என்றால் போர் இல்லை கால்வாய் உள்ளது. அந்த கால்வாயின் வழியாக தான் வண்டி வரும் எங்கள் நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வோம். வேலி காத்தான் செடிகளை அகற்றகோரி அரசாங்கம் குறிப்பிட்ட உத்தரவு குறித்து தெரியுமா என்றால் ஆதார் அட்டை விவசாய நிலத்தோடு இணைக்கும் போது தான் தெரியும். எந்த வருடம் என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. இராதாகிருஷ்ணன் மற்றும் இரத்தினவள்ளி விற்பனை செய்த பத்திரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. அதிலிருந்து இன்று வரை பிரதிவாதி குடும்பத்தோடு நன்றாக தான் பழகி வந்தேன் என்றால் சரிதான். அதனால் அவர்களை நன்றாக தெரியும் என்றால் ஆம். அதனால் தான் பிரதிவாதிகள் சார்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.01.p.m.**